முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பூனைக்கண்ணார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

13.10.2018, சனிக்கிழமை

1. **ஆன்ம ஞான பலம் பெருக்கி**
**ஆற்றலுள்ள மக்களாய் மாற்ற**
**ஆன்மீக ஞான சபை அமைத்து**
**அகிலம் காக்க வந்த ஞானியே**

2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் ஒளி சூட்சும நூலை
இனிமைபட **விளம்பி தரிவை திங்கள்**
**இருபானேழ் திகதி காரி வாரம்தனில்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 27ம் நாள் 13.10.2018, சனிக்கிழமை)**

3. **தன்னிலே பூனைக்கண்ணார் யானும்**
தவராசன் வழி உலகம் தேற உரைப்பேன்
இன்னல் கண்டு வரும் சாமானியரும்
எழுந்து அமைதி ஏற்றம் காண

4. காணவே எளிய வழி காட்டி
கருணை கொண்டு வா என
தானதரும நோக்குடன்
தன்னார்வ தொண்டனாய் இரு

5. இருக்கவே எந்த நிலை நின்றாலும்
என் பலம் என் வரத்தின் வழி
வருத்தம் போக்கி காப்பேனென
வா என்று அழைத்து உயர்பூசை

6. பூசையாம் ஞானிகள் பூசை
புகலுவேன் சிறப்புற செய்து
ஆசி தந்து அருளமுதும் தந்து
அண்ணலாய் அருளும் அரங்கனே

7. அரங்கனே கலி மீட்பின் குருவென
அகிலத்தார் நம்பி வருகவே
வரங்களுடன் வளர்ச்சிகள் கண்டும்
வாழ்வாதார தேக்கம் என்பது இல்லா

8. தேக்கமில்லா எல்லா மக்களும்
தேற்றம் அடைவது உறுதி
ஊக்கமுடன் இனியும் காலம்
உலகில் தாழ்த்தா சடுதி வர

9. வருவதுடன் தொடர்ந்து வர
வாழும் வாழ்வின் அர்த்தமும்
ஏறுமுகம் காண உண்டான சூட்சுமமும்
எக்காலமும் நிலைத்திடும் பக்குவமும்

10. பக்குவமும் பரோபகாரம் கூட்டி
பரிபக்குவம் பூரண சித்தியும்
ஆக்கமுடன் அழியா தன்மையும்
ஆறுமுக அரங்க ஞானி வழி

11. வழிதனில் இலகுவாய் அடைந்து
வடிவேலன் ஆளுமை மிகுந்த
அழியா ஞானயுகம் இடம் பெறுவர்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

### மகான் பூனைக்கண்ணார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :

கலியுக மாமாயையுள் சிக்கியுள்ள கலியுக மக்களின் அறியாமையெனும் இருளைப் போக்கி அவர் தம்முள் ஞானஒளி ஏற்றி ஆன்ம ஞானபலம்தனை பெருக்கி அவர்களை ஆற்றல் உள்ள மக்களாய் மாற்றிட ஆன்மீக ஞானசபைதனை அமைத்து இவ்வுலகை காக்க முருகப்பெருமானின் அருளாற்றலினை அளவிலாது பெற்று ஆறுமுகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 27ம் நாள் 13.10.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பூனைக்கண்ணார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பூனைக்கண்ணார்.

கலியுகத்தின் மாயையுள் அகப்பட்டு துன்பப்படுகின்ற சாமானியரும், அவர்கள் மாயையிலிருந்து விடுபட்டு சாந்தமடைந்து வாழ்வில் அமைதியையும், முன்னேற்றத்தையும் காண அவர்களும் கடைப்பிடித்திடும் வகையில் எளிய முறையில் வழிகாட்டி கருணையோடு அவர்களை வாருங்கள் மக்களே கடைத்தேறலாம் என அழைப்பு விடுத்து ,தானதருமங்களை தாராளமாய் செய்யும் எவரும் தன்னலமற்று தொண்டு செய்கின்ற எவரும் எந்த நிலையில் இருந்தாலும் அரங்கன் எனது பலத்தினை, எனது வரங்களின் மூலமாக அவர்களது வருத்தங்களை போக்கி காப்பேன் என உலகோர்க்கு அழைப்புவிடுத்து காக்கின்றார் அரங்கமகா தேசிகன்.

உலக மக்களை தர்மங்களை செய்து தொண்டுகள் செய்து ஆசி பெற அழைப்பு விடுக்கும் அரங்கன் உலகோர் நலம்பெற முற்றுப்பெற்ற ஞானிகளை முன்னிறுத்தி ஞானத்தலைவன் முருகப்பெருமானை முன்னிறுத்தி ஞான பூஜைகளை செய்து வருகின்றார்.

உலக மக்கள் ஜென்மத்தைக் கடைத்தேற்றவல்ல ஞானபூஜைகளில் கலந்து பூஜைகளை செய்திட வழிவகைகள் செய்து அவர்களுக்கு ஆசிகளை வழங்கி அருள் செய்வதுடன் அவர்களுக்கு அருளமுதாம் உணவினை அளித்து அருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனே கலியுகத்தின் மீட்பாளர் ஆவார்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கனை நம்பி வருகின்றவர்கள், அரங்கனிடத்து வரங்களை பெற்று நல்ல வளர்ச்சியையும் அடைந்து வாழ்வாதாரத்தில் தேக்கம் என்பதே இல்லாத நிலையை உறுதியாக அடைந்து சிறப்படைவார்கள்.

ஆதலினால் உலக மக்களே இனியும் காலம் தாழ்த்தாமல் உடன் விரைந்து அரங்கன் திருவடி திருச்சேவைகளுக்கு வந்து சரணடைந்து தொண்டுகளை செய்திடுங்கள்.

அரங்கன் திருவடி சரணடைந்து அரங்கனை பின்பற்றி தொடர்ந்து வரவர, அவர்கள் வாழும் வாழ்வின் அர்த்தம் விளங்கும். உயர்வான நிலையை அடைந்திட உண்டான சூட்சுமமும் எக்காலமும் நிலைத்திடும்.

பக்குவமும் பரோபகாரமும் கூட்டி கருணையோடு வாழ்வில் நடந்து பரிபக்குவத்தையும் பூரணசித்தியும் ஆக்கமும் ஊக்கமும் பெற்று ஆறுமுக அரங்கன் மூலமாய் அழியாத தன்மையையும் அரங்கனின் தூயநெறி வழிதனிலே சென்று அடைந்து முருகப்பெருமான் நேரினில் தோன்றி ஆட்சி செய்கின்ற ஞானஆட்சியில், ஞானஆட்சி நடக்கும் ஞானஉலகினில் இடம் பெற்று சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பூனைக்கண்ணார்.

–சுபம்–